செ.வெ.எண்:45 நாள்: 27.12.17

ந.க.எண்.பஇ4/5834/2017
நாள். 27.12.2017

மாவட்ட ஆட்சியரகம் (தேர்தல்)
கடலூர்

## பத்திரிக்கை செய்தி

கடலூர் மாவட்டத்தை சார்ந்த ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு வரைவு மறுவரையறை தொடர்பான பணிகள் முடிக்கப்பெற்று சம்மந்தப்பட்ட அலுவலர்களால் தயார் செய்யப்பட்டு வரைவு முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வார்டு வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் ஊரக பகுதிகளை பொறுத்தவரையில் அந்தந்த ஊராட்சி அலுவலகங்களிலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், பேரூராட்சிகளை பொறுத்தவரையில் அந்தந்த பேரூராட்சி அலுவலகங்களிலும் நகராட்சியை பொறுத்தவரையில் அந்தந்த நகராட்சி அலுவலகங்களிலும் 27.12.2017 அன்று வெளியிடப்படும். நிர்ணயம் செய்யப்பட்டுள்ள புதிய வார்டு எல்லைகள் அடங்கிய இக்கருத்துருக்கள் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பார்வைக்கு வைக்கப்படும்.

இவ்வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் மீதான கருத்துரை / மறுப்புரைகள் / புகார் / ஆலோசனைகள் ஏதும் இருப்பின் பொதுமக்கள் / அரசியல் கட்சிகள் 27.12.2017 முதல் 02.01.2018 முடிய அவற்றை நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ சம்மந்தப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களிடம் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட மறுவரையறை அலுவலர் /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர் மாவட்டம்.

வெளியீடு:- செ.ம.அ.அ. கடலூர்.